## தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2014

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 14 ஆந்திகதிய 2767 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சு தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஏறத்தாழ 60 கிமீ தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தலில் தரமுயர்த்தல் மூலம் தேசிய போக்குவரத்தின் வினைத்திறனை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13,728 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 105.6 மில்லியனானதுடன் அதில் ரூபா 11,050 மில்லினிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆந் திகதிய 2217 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகள் துறை செயற்திட்டம் என அழைக்கப்படும் அதேநோக்கமுள்ள செயற்திட்டத்திற்காக மேலதிக நிதியினை வழங்குவதற்கு இச் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டதுடன் இச் செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இந்த இரண்டு செயற்திட்டங்களும் ஒரே செயற்திட்ட கண்காணிப்பு கூறினால் நிர்வகிக்கப்படுகின்ற போதிலும் உரிய செயற்திட்டங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2011 திசெம்பர் 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு

உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணககுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 அந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பந்திகளின் பிரகாரம் மீளப்பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளை விட வேறு ஏதாவது கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு செயற்திட்ட ஊழியர்கள் தகுதியற்றிருந்த போதிலும், செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது விசேட படிகள் மற்றும் மருத்துவ விடுமுறைக்கான காசாக்கலாக முறையே ரூபா 9,918,622 மற்றும் ரூபா 776,316 என்பன செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) வழமையாக, செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களின் சம்பளங்கள் முகாமைத்துவ சேவைகள்

திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டது.

(இ) மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியில் செய்யப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக மேந்தலைக் கட்டணங்களாக செயற்திட்டத்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 2,354,794 தொகை அனுப்பப்பட்டிருந்தது.

## 3.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தின் மீளாய்வாண்டின் போதான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் போதான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடிபி | 85.00 | 11,050 | 22.6 | 2,939.3 | 51.2 | 6,661.9 |
| இலங்கை அரசாங்கம் | 20.60 | 2,678 | 6.7 | 867.7 | 24.5 | 3,188.1 |
| மொத்தம் | 105.6 | 13,728 | 29.3 | 3,807.0 | 75.7 | 9,850.0 |

மேற்குறிப்பிட்ட தகலவ்களின் பிரகாரம், செயற்திட்ட காலத்தின் 03 ஆண்டுகள் கடந்த பின்னர் கடன் பெறுகைகளின் 60 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட காலப்பகுதியின் எஞ்சிய 01 வருட காலப்பகுதியின் போது மிகுதி கடன் தொகையை பயன்படுத்துவதன் சாத்தியத்தன்மை ஐயத்திற்கிடமாக இருந்தன.

## 3.2. பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட 06 தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| வீதி | வீதி நீளம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| | கிமீ | % |
| மாத்தறை – கொடகம | 3.40 | 100.00 |
| ஹிக்கடுவ- தெற்கு நெடுஞ்சாலை | 14.34 | 62.34 |

| | | |
|---|---|---|
| அளுத்கம- தெற்கு நெடுஞ்சாலை | 11.07 | 69.05 |
| கட்டுகுறுந்தை- நாகொடை | 2.72 | 100.00 |
| கிருலப்பனை- கொடகம | 13.3 | 57.81 |
| பாமன்கடை – கெஸ்பேவ | 12.76 | 58.2 |
| மொத்தம் | 57.59 | |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த கிருலப்பனை- கொடகம வீதியின் புனரமைப்பு வேலைகள் தேவைப்பட்ட இயந்திரங்கள், வேறு உபகரணங்கள் மற்றும் மனித வலு போன்றவற்றின் தாமதமான இயங்குதல் காரணமாக 2014 வரை தாமதப்பட்டிருந்தது. மேலும், வேலையின் உள்ளபடியான நோக்கெல்லையை பொருந்தச் செய்வதற்கு ஒப்பந்தகாரால் திருத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தத்தின் கால நீடிப்பு மற்றும் மேலதிக கிரயம் என்பன கட்டாயம் விளையக்கூடும்.

(ஆ) பாமன்கடை – கெஸ்பேவ வீதியின் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்த உடன்படிக்கை 2012 ஒக்தோபர் 01 இல் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், வீதியின் கட்டம் 1 இன் நிர்மாணத்திற்கான வேலைத்தளம் 06 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2013 மார்ச் 25 இல் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், வீதியின் கட்டம் 02 இன் நிர்மாணத்திர்கான வேலைத்தளத்தின் உரிமை இன்னொரு இரண்டு மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2014 மே 20 இல் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், நிர்மாண ஒப்பந்தங்கள் காணிச் சுவீகரிப்பின் பூர்த்தியாக்கல் மற்றும் வீதிப் பயன்பாட்டு மாற்றங்கள் என்பவற்றிற்கு முன்னர் செயற்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால் ஒப்பந்தகாரர் வேலைத்திட்டத்தின் பிரகாரம் வேலையை தொடங்குவதற்கு தவறியிருந்தார்.

## 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாத்தறை – கொடகம வீதியின் புனரமைப்பு வேலைகளின் அளவீடுகள் குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்திருந்ததுடன் இதன்விளைவாக வேலைகளின் கிரயம் ரூபா 14 மில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும், செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 14 மில்லியன் கிரயத்தில் மாத்தறையில் ரகுல கல்லூரியில் சுற்றுமதில் நிர்மாணம் மற்றும் 25 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட தண்ணீர் முறைமை குழாய்களின் இடம்மாற்றல் என்பன வேலையின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாமன்கடை – கெஸ்பேவ வீதியின் புனரமைப்பு வேலைகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆரம்பநிலை மற்றும் பொதுவான விடயங்கள் மீதான மொத்த தொகை கொடுப்பனவுகளிற்கான பொறியியலாளருடைய மதிப்பீடுகள் ரூபா 145.33 மில்லியன் தொகையாக இருந்த போதிலும் ஒப்பந்தகாரர் அத்தகைய

வேலைகளிற்காக ரூபா 256 மில்லியன் தொகையை குறிப்பிட்டிருந்தார். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரருடைய மதிப்பீட்டை அங்கீகரிக்க முன்னர் வீதப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை..

(ii) 2012 ஆகஸ்ட் 07 இன் 2/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின்படி சகல கொள்வனவுகளிற்குமான மதிப்பீடுகள் மொத்த கொள்வனவு கிரயத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக சகல விடயங்களையும் கருத்திற்கொள்வதன் மூலம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 660.9 மில்லியன் மதிப்பிடப்பட்ட தொகையான இரண்டு வீதிப் பிரிவுகளின் புனரமைப்பு வேலைகள் மற்றும் ரூபா 95 மில்லியன் மதிப்பிடப்பட்ட தொகையான பாமன்கடை பாலத்தின் கிரயம் என்பன ஆரம்ப மதிப்பீடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய பாலத்தின் கிரயத்தை மதிப்பிடாமல் இரத்தினப்பிட்டிய புதிய பாலம் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், அத்தகைய நோக்கெல்லை முரண்களிற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளின் 14.6 ஆம் பந்தியின் படி, இடைக்கால கொடுப்பனவின் ஆகக்குறைந்த பெறுமதி ரூபா 66.4 மில்லியனிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வேண்டப்பட்ட ஆகக்குறைந்த எல்லையை எட்டியிருக்காமல் மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட 22 சந்தர்ப்பங்களில், 12 சந்தர்ப்பங்களில் ரூபா 487 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான இடைக்காலக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

(ஈ) பொறியியலாளர்களுக்கு வசதிகளை வழங்குதல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு சொந்தமான குழாய் வரிசைகளை இடம்மாற்றல் மற்றும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத உள்ளூராட்சி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி போன்றவாறு ஹக்கடுவ- தென்பகுதி நெடுங்சாலை வீதியின் முன்னேற்றத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக ரூபா 74.82 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

மேலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்காக கட்டிடம் மற்றும் ஹக்கடுவ தபால் அலுவலகம் மற்றும் கோன்பினுவல தபால் அலுவலகம் என்பவற்றில் சுற்றுமதில் என்பவற்றின் நிர்மாணத்திற்காக ரூபா 5.74 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 3.4. சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) நியமனக் கடிதங்களின் பிரகாரம், உள்ளூர் ஆலோசனையாளர்கள் அவர்களுடைய வேதனங்களை விட ஏதாவது படிகளிற்கு தகுதியற்றிருந்த போதிலும் எரிபொருள் படிகள் மற்றும் பிரயாணச் செலவினம் என முறையே ரூபா 2.88 மில்லியன் மற்றும் ரூபா 1.42 மில்லியன் செயற்திட்டத்தால் மீளாய்வாண்டின் போது அவர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மாத்தறை – கொடகம வீதியின் புனரமைப்பு வேலைகளிற்காக தயாரிக்கப்பட்ட அளவீட்டு பட்டியலின் பிரகாரம், 8,470 மீற்றர் இடைவெளியல் தடைகள் போடப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. 2,198 மீற்றர் நீளமான இடைவெளியில் தடைகள் போடப்பட்டிருந்ததுடன் ஒரு இடைவெளியிற்கு ரூபா

2,500 வீதத்தில் ரூபா 5.49 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மிகுதி 6,272 மீற்றர் இடைவெளியின் தடைக்கற்கள் பின்னர் போடப்பட்டிருந்ததுடன் 02 முரண் கட்டளை ஊடாக ஒரு இடைவெளியிற்கு ரூபா 3,745 வீதத்தில் அவற்றில் ரூபா 23.49 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காத வாகனங்களிற்காக செயற்திட்டத்தால் ரூபா 2.35 மில்லியன் தொகையான எரிபொருள் கிரயம் ஏற்பட்டிருந்தது.

(iv) அமுலாக்கல் முகவராண்மையின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகள் ஒப்பந்தகாரரால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருக்காத போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளருக்கு ரூபா 4.64 மில்லியன் வாடகையில் வதிவிடமொன்று வழங்கப்பட்டிருந்தது.

(v) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், 1.338 காணித்துண்டுகள் உடமையாளர்கள் கெஸ்பேவ –பாமன்கடை வீதியின் புனரமைப்பிற்காக சுவீகரிக்கப்பட்ட காணியின் இழப்பீட்டிற்காக தகுதியுடையவர்களாக உள்ளனர், சுவீகரிக்கப்பட்ட 1,257 காணித் துண்டுகளிற்காக காணி உடமையாளர்களிற்கு 2014 திசெம்பர் 31 வரை ரூபா 1,736.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அவற்றில் இழப்பீட்டு கொடுப்பனவுகளிலுள்ள தாமதத்தில் வட்டியாக ரூபா 2.6 மில்லியன் உள்ளடக்கப்பட்டுள்ளன.